OS. 100/2022

நாள். 22.04.2026

பி.வா.சா. 1 – சுசீந்திரன்

வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–

வழக்கு சொத்துக்களில் வாதிக்கும், எனக்கும் சமபங்கு உள்ளது என்றால் சரிதான். தாவா 5ம் இலக்க சொத்தில் நடத்திவரக்கூடிய அருணா நோட்புக்ஸ் வியாபாரத்தில் எனக்கும், வாதிக்கும் பங்கு உள்ளது என்றால் சரியல்ல. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் பக்கம் 2, பாரா 3ல் என்னுடைய அனுமதியின் பேரில் தாவா 5 மற்றும் 9ல் அருணா நோட்புக்ஸ் என்ற பெயரில் வாதி மற்றும் பிரதிவாதியை பங்குதாரராக கொண்டு கூட்டு தொழில் செய்து வருகிறார் என சொல்லப்பட்டுள்ளது என்றால் அது தவறு. அருணா நோட்புக்ஸ் தொழில் செய்வதற்கு நான் கையெழுத்து போட்டுக் கொடுத்தேனா என்றால் இல்லை. அருணா நோட்புக்ஸ் கடைவியாபாரம் எந்த வருடத்திலிருந்து செய்யப்பட்டு வருகிறது என்றால் 2013. வாதி 2013ம் ஆண்டிலிருந்து எந்த கணக்கும் எனக்கு கொடுக்கவில்லை என்றால் சரிதான். 2013 ம் ஆண்டிலிருந்து நாளதுதேதிவரை கணக்கு வழக்குகள் கேட்டு எவ்வித நடவடிக்கையும் வாதிக்கு எதிராக நான் எடுக்கவில்லை என்றால் சரிதான். வாதி அந்த கடை வியாபாரத்திலிருந்து வருமானத்தை முறையாக எனக்கு பங்கு கொடுத்து வந்ததால்தான் நான் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். வாதி அருணா நோட்புக்ஸ் கடை வியாபாரம் சம்மந்தமாக விற்பனைவரி அலுவலகம் மற்றும் வருமானவரி அலுவலகத்தில் முறையாக கணக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். வாதி கணக்கு வழக்குகளை சரியாக தாக்கல் செய்து வந்ததாலும், எனக்கு சேரவேண்டிய பங்கை கொடுத்து வந்ததாலும்தான் நான் என் எதிர்வழக்குரையிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ அருணா நோட்புக்ஸ் கடை வியாபாரம் பற்றி எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா 5 முதல் 11 இலக்க சொத்துக்களை நானும், வாதியும் கூட்டாக

கிரையம் பெறும்போது என் தகப்பனார் உயிரோடு இல்லை என்றால் சரிதான். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் தாவா 2, 3, 5 முதல் 11 சொத்துக்களை என் தகப்பனார் அவரது பணத்தைக்கொண்டு வாதி பெயரில் பெயரளவில் கிரையம் வாங்கினார் என சொல்லியுள்ளது தவறு என்றால் சரிதான். தாவா 1 முதல் 11 இலக்க சொத்துக்கள் அனைத்திலும் எனக்கு சரிசமபங்கு உள்ளது என்றால் சரிதான். அதன் அடிப்படையில்தான் நான் ஒரு சொத்திலும், வாதி ஒரு சொத்திலும் இணக்கமாக குடியிருந்து என்றால் சரிதான். நான் வாதி குடியிருந்து வருவதற்கு அனுமதி கொடுத்து அவர் குடியிருந்துவரவில்லை என்றால் சரிதான். பத்திர எழுத்தர் ராமநாதன் (வா.சா.2) எங்கள் குடும்பத்திற்கு நண்பர் என்றால் சரிதான். ராமநாதனுக்கு என் தகப்பனார்தான் திருமணம் செய்து வைத்தார் என்றால் சரிதான். அதனால் ராமநாதனுக்கு வாதி மற்றும் எங்கள் குடும்பத்தின் மீது தனி மரியாதை வைத்திருப்பார் என்றால் சரிதான். எங்கள் குடும்பமும், வாதி குடும்பமும் ஏதாவது பிரச்சனை ஏற்பட்டால் இராமநாதனிடம்தான் கலந்து ஆலோசிப்போம் என்றால் சரிதான். ராமநாதன் எங்கள் இருவர் குடும்பத்திற்கு எதிராக எந்த காலத்திலும் செயல்பட்டதில்லை என்றால் சரிதான். 2018ம் ஆண்டுவரை என் குடும்பமும், வாதி குடும்பமும் ஒன்றாக ராசியாக இருந்து வந்தோம் என்றால் சரிதான். 2018ம் ஆண்டிற்கு பிறகு எனக்கும், வாதிக்கும் சிறுசிறு மனஸ்தாபங்கள் ஏற்பட்டது என்றால் சரிதான். அதனால்தான் இந்த பிரச்சனை சம்மந்தமாக நாங்கள் ராமநாதனிடம் பேசினோம் என்றால் சரிதான். நானும், வாதியும் எங்களுக்குள் ஏற்பட்ட பிரச்சனை சம்மந்தமாக ராமநாதனிடம் முறையிட்டோம் என்றால் சரிதான். அதனால் ராமநாதன் இருகுடும்ப உறுப்பினர்களை வைத்துத்தான் பிரச்சனையை பேசவேண்டும் என்றும், எங்களை மட்டும் வைத்து பேசுவது சரியாக இருக்காது என்று சொன்னார் என்றால் சரிதான். அதனால்தான் நாங்கள் எங்கள் குடும்ப சொத்துக்கள் சம்மந்தப்பட்ட ஆவணங்களை ராமநாதன்வசம் ஒப்படைத்தோம் என்றால் சரிதான். நான் குடியிருக்கும் வீட்டையும், வாதி குடியிருக்கும்

வீட்டையும் இரண்டு பங்குகளாக பிரித்தால் நானும் பயன்படுத்த முடியாது, வாதியும் பயன்படுத்த முடியாது என்று ராமநாதன் சொன்னார் என்றால் சரிதான். அதனால் அவரவர்கள் குடியிருக்கும் வீட்டை அவரவர்களுக்கு ஒதுக்கலாம் என சொன்னார் என்றால் சரிதான். அவ்வாறு பிரிக்கும்போது நான் குடியிருக்கும் வீட்டின் விஸ்தீரணம் குறைவாகவும், வாதி குடியிருக்கும் வீட்டின் விஸ்தீரணம் அதிகமாகவும், இருந்ததால் அதை ஈடுகட்டுவதற்கு வாதி 10ம் இலக்க சொத்தை வீட்டிற்காக ஒதுக்குவதற்காக சொன்னார் என்றால் சரியல்ல. என் தாயார் பெயரில் உள்ள தாவா 4ம் இலக்க சொத்து என் பாகத்திற்கு ஒதுக்கலாம் என பேசப்பட்டது என்றால் சரிதான். நானும், வாதியும் ராமநாதன் முன்னிலையில் இருகுடும்பத்தார்களின் உறுப்பினர்களை வைத்து பேசியதில் எனக்கு 7 இலக்க சொத்துக்களும், வாதிக்கு 6 இலக்க சொத்துக்களும் ஒதுக்குவது என பேசப்பட்டது என்றால் சரிதான். அதனால் அருணா ஸ்டோர்ஸ் கடை எனக்கும், அருணா நோட்புக்ஸ் கடை வாதிக்கும் ஒதுக்குவது என பேசப்பட்டது என்றால் சரிதான். அதன் பிரகாரம் 2018 முதல் அருணா ஸ்டோர்ஸ்சை நான் தனியாகவும், அருணா நோட்புக் கடையை வாதி தனியாகவும் நடத்தி வருகிறோம் என்றால் சரிதான். கடையில் உள்ள ஸ்டாக்குகள் கணக்கிடப்பட்டு வாதி ரூ.50 இலட்சம் எனக்கு கூடுதலாக தருவது என்றும் பேசப்பட்டு, அந்த ரூ.50 இலட்சத்திற்கு ரூ.43 இலட்சம் மதிப்பில் ஸ்டாக்குகள் கொடுக்கப்பட்டுவிட்டது என்றும், மீதி ரூ.7 இலட்சம் நான் ரொக்கமாக வாங்கிக்கொண்டேன் என்றும் சொன்னால் சரியல்ல. வா.சா.2 ராமநாதன் தான் ரூ.7 இலட்சம் வாதியிடம் பெற்று என்னிடம் ரொக்கமாக கொடுத்தார் என்றால் சரியல்ல. நான் என் எதிர்வழக்குரையிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ வாதியிடம் ரூ.7 இலட்சம் ரொக்கமாக பெறவில்லை என மறுத்து சொல்லவில்லை என்றால் சரிதான். நான் ரூ.7 இலட்சம் பெற்றுக் கொண்டதால்தான் அதை மறுத்து சொல்லவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் சொத்து சம்மந்தமாக பேசியதை வா.சா.2 ராமநாதன் மூலம் எழுதி வா.சா.ஆ.25

உறுதிமொழி அக்ரிமென்ட் என ஆவணம் எழுதி அதில் எங்கள் தரப்பில் நானும், என் தாயார் ஆனந்தவள்ளி, மனைவி சுதாவும் கையெழுத்து செய்தோம் என்றால் கையெழுத்து செய்யவில்லை. வாதி தரப்பில் வாதி தவிர்த்து அவரது மனைவி மற்றும் குழந்தைகள் கையெழுத்து செய்தார்கள் என்றால் தெரியாது. வா.சா.ஆ.25 உறுதிமொழி அக்ரிமெண்ட் உற்பத்தி செய்யப்பட்டது என்ற விவரம் எனக்கு எப்போது தெரியவந்தது என்றால் எனக்கு தெரியாது. நான் எந்த விவரமும் தெரியாமல்தான் என்னுடைய எதிர்வழக்குரையிலும, பிரமாண வாக்குமூலத்திலும் வா.சா.ஆ.25 உற்பத்தி செய்யப்பட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.25 ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல என ஆவணத்தை பார்க்காமலே குத்துமதிப்பாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய கையெழுத்தை கையெழுத்து நிபுணருக்கு அனுப்பினால்தான் வா.சா.ஆ.25 ல் உள்ள கையெழுத்து என்னுடைய கையெழுத்தா, இல்லையா என்பது தெரியும் என்றால் சரிதான். வா.சா.ஆ.25 ஆவணம் என் குடும்பத்தார், வாதி குடும்பத்தார் முன்னிலையில் எழுதப்பட்டு அதில் உள்ள விவரங்கள் இருகுடும்பத்தார்களுக்கும் படித்து காண்பிக்கப்பட்டு கையெழுத்து செய்தோம் என்றால் சரியல்ல. நான் தாவா 4 ம்இலக்க சொத்தில் இராமநாதசுவாமி புக் ஷாப் என்ற பெயரில் கடை நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். அந்த கடைக்கு பதிவு சான்றிதழ் என் பெயரில் உள்ளது என்றால் என் மனைவி பெயரில் உள்ளது. அந்த கடை 2017 வருடம் என் மனைவி பெயரில் ஆரம்பிக்கப்பட்டது என்றால் ஞாபகமில்லை, பதிவு சான்றிதழைப் பார்த்து சொல்கிறேன். 2017 ம் வருடம் நான் தனியாக என் மனைவி பெயரில் கடை ஆரம்பித்த பிறகுதான் எனக்கும், வாதிக்கும் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல, தவறு. நான் அருணா ஸ்டோர்ஸிலிருந்து சரக்குகள் சப்ளை செய்துவிட்டு பணத்தை என் கடை மூலமாக வசூல் செய்து கொண்டேன் என்றால் சரியல்ல. பொருட்கள் இருப்புகள் சரிபார்க்கும்போதுதான் இருப்புகள் சரியாக இல்லை என்பதால்,

எனக்கும், வாதிக்கும் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல. அவ்வாறு பிரச்சனை ஏற்பட்டது என்றும், எனக்கும், வாதிக்கும் மனஸ்தாபம் ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான் சொத்துக்கள் பிரிப்பது சம்மந்தமாக பஞ்சாயத்து பேசிக்கொண்டோம் என்றால் சரியல்ல. என் உடன் பிறந்த தங்கைகள் மூவருக்கும் வாதிதான் திருமணம் செய்து வைத்தார் என்றால் சரியல்ல, என் தகப்பனார் உயிரோடு இருக்கும்போதே திருமணம் செய்து வைத்துவிட்டார். தாவா சொத்துக்களில் எனக்கு தனிப்பட்ட உரிமை கிடையாது என்றால் சரிதான். தாவா சொத்துக்களில் எனக்கும், வாதிக்கும் பாதிபங்கு உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.25ன் படி நானும், வாதியும் சொத்துக்களை தனியாக அடைந்து அனுபவித்து வருகிறோம் என்றும், பாக ஆவணம் பதிவு செய்வதற்கு நான் முன்வரவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ–25 எழுதப்பட்ட பிறகு பாக ஆவணம் எழுதப்பட்டது என்றால் தெரியாது. பாக ஆவணம் எழுதுவதற்கு முத்திரைத்தாள்களும் வாங்கப்பட்டது என்றால் தெரியாது. பதிவு செய்ய போகும்போது நானோ, எனது குடும்பத்தாரோ செல்லவில்லை என்பதால்தான் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.25ன் படி ரூ.7 இலட்சம் ரொக்கமாக பெற்றுக்கொண்டு தற்போது வழக்கிற்காக வாங்கவில்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் வாதி கோரியுள்ள பரிகாரங்கள் அவருக்கு கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.